செ.வெ.எண்: 11/அக்டோபர் நாள்: 09.10.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தமிழக அரசு விருதுகள் வழங்கப்படவுள்ளன மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்கள்/நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் 7 பிரிவுகளில் தமிழக அரசு விருதுகள் 03.12.2020 அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படவுள்ளது.

I. சிறந்த பணியாளர்/சுயதொழில் புரிபவர்-1. கை, கால் பாதிக்கப்பட்டோர் (LD) அல்லது தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் (LC), 2. பார்வை திறன் பாதிக்கப்பட்டோர் (VI), 3. செவித்திறன் பாதிக்கப்பட்டோா (HI), 4. மனவளர்ச்சி குன்றியோர் (ID), 5. பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு (SpLaD), 6. Developmental Disorder (புறவுலக சிந்தனையற்றோர் (ASD), குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு (SLD), 7.மனநோய், 8. Disability caused due to blood disorder (இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு (He), இரத்த அழிவுச்சோகை (Th), அரிவாளனு இரத்தச் சோகை (SCD), 9.நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு திசு பண்முகக்கடினமாதல் (MS), நடுக்குவாதம் (PD), 10. பல்வகை குறைபாடு (Multiple Disabilities (MD) ஆகியோருக்கான விருதுகள் 10 மற்றும் 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்

II. சிறந்த ஆசிரியர்-(பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல், செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு கற்பித்தல்)-கான விருதுகள் 3 மற்றும் 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்

III. சிறந்த சமூகப் பணியாளருக்கான விருது 1 மற்றும் 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்

IV. மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனத்திற்கு விருது 1 மற்றும் 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்

V. மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனத்திற்கு விருது 1 மற்றும் 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்

VI. ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (செவித்திறன் குறைந்தோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்)-க்கு விருதுகள் 2 மற்றும் 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்

VII. மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கு விருதுகள் 2 மற்றும் 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்

எனவே மொத்தம் 20 விருதுகள் மற்றும் 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளன.

மேற்காணும் விருதுகள் பெற மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், எண்:5, காமராஜர் சாலை, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், சென்னை-600 005 அல்லது www.scd.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து அல்லது அந்தந்த மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்களிடம் விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடம் பரிந்து பெற்று மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு 20.10.2020-க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரின் பரிந்துரை இல்லாத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**